DINAMALAR

PAGE NO: 04 DATE: 20.06.23

# பொது நூலகர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி

**புதுச்சேரி, ஜூன் 20–**

புதுச்சேரி பல்கலையில் பொது நூலகர்களுக்கான ஐந்து நாள் திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் நடந்தது.

துணைவேந்தர் குர்மீத் சிங் குத்து விளக்கேற்றி முகாமை துவக்கி வைத்தார்.

ஆந்திரா, கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு, தெலுங்கானா மற்றும் புதுச்சேரி மாநிலங்களை சேர்ந்த பொது நூலகர்கள் கலந்து கொண்டனர். கல்வியாளர்கள், தொழில் துறையினர் சிறப்பு அமர்வுகளில் விளக்கம் அளித்தனர். நிறைவு விழா பல்கலைக் கழக ஆனந்த ரங்கப் பிள்ளை நூலக கட்டடத்தில் நடந்தது.

உதவி நூலகர் பி.விஜயகுமார் வரவேற்றார். கணினி ஆய்வாளர் பழனிவேல், நூலகத்தின் செயல்பாடுகளை பட்டியலிட்டார். புதுச்சேரி அரசின் கலை பண்பாட்டுத் துறை சார்பு செயலர் கலியபெருமாள் வாழ்த்தி பேசினார்.

பல்கலைக்கழக கலாசார பண்பாட்டு உறவுகள் இயக்ககத்தின் சிறப்பு பணி அலுவலர் ராஜிவ் ஜெயின் முகாமில் பங்கேற்ற பொதுநூலகர்களுக்கு சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.

நூலகர் மு.விஜயகுமார் நன்றி கூறினார்.




புதுச்சேரி பல்கலையில் நடந்த பொது நூலகர்களுக்கான ஐந்து நாள் திறன் மேம்பாட்டு பயிற்சி முகாமை துணைவேந்தர் குர்மீத் சிங் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.